<u>பகுதி 1 – தேவனாகிய கடவுளை பற்றிய கேள்விகள்</u>

***<u>மக்கள் அடிக்கடி கேட்கும் கேள்விகள்</u>***

நாம் இந்த புத்தகத்தை வாசிக்க தொடங்கும் முன், நம்மை நாமே இந்த கேள்விகள் கேட்டுக் கொள்வோம் ....

எனக்கு தேவனாகிய கடவுள் யார்?

எனக்கும் தேவனாகிய கடவுளுக்கும் உள்ள உறவு என்ன?

தேவனாகிய கடவுள் தண்டிக்கிறவரா?

என்னுடைய எண்ணப்படி, தேவனாகிய கடவுள் அன்பானவரா அல்லது கோபமுள்ளவரா?

நான் நினைப்பது உண்மைதான், என்று நான் எப்படி தெரிந்துக் கொள்ளமுடியும்?

**தேவனாகிய கடவுள் யார்?**

தேவனாகிய கடவுள் எல்லாம் வல்லவர், நம்மை படைத்தவர், நாம் அவரது படைப்புகள். அவர் தனது மகன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக “அப்பா” என்று அழைக்க நம்மை அனுமதிக்கிறார்.

**இயேசு யார்?**

இயேசு தேவனுடைய குமாரன். தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தவர். அவருடைய எல்லாப் படைப்புகளுக்கும் அவரே உரிமையாளர்.

தேவன் மனிதராகிய நம்மை இரட்சிப்பதற்காகவும், தேவனுடைய பிள்ளைகளாக அவரோடு ஒன்று சேர்த்துகொள்ளவும், தமது ஒரேப் பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம் பாவதிற்குப் பலியாக சிலுவையிலே மரிக்க உலகதிற்கு அனுப்பினார்.

இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிப்பதற்காக நம்முடைய எல்லா பாவங்களையும் சிலுவையிலே சுமந்தார்.இயேசு கிறிஸ்துவின் மூலமாக நம்மை படைத்த தேவனை “அப்பா” என்று அழைக்க உரிமை பெற்று இருக்கிறோம்.

**பரிசுத்த ஆவியானவர் யார்?**

இயேசு உலகத்தை விட்டு போகும்பொது, நம்மோடிருக்கவும் நமக்கு வழிகாட்டவும் அவரது ஆவியை அனுப்பினார். இவரே பரிசுத்த ஆவியானவர்.

இயேசு கடவுளா? பரிசுத்த ஆவியானவர் கடவுளா?

ஆம். நம்மோடிருப்பது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய ஒரே திரித்துவக் கடவுள். வானம், பூமி, பூமியில் உள்ள யாவற்றையும், மனிதர்களையும் படைத்தவர் தேவனாகிய கடவுள்.

தேவனுடைய மகனாகிய இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்து நம்மோடு வாழ்ந்து, தேவனுடைய வழிகளை நமக்கு போதிக்க, தேவனால் அனுப்பபட்டவர்

அவர் உலகில், நமக்காக சிலுவையில் மரித்து, தனது விலையேறபட்ட இரத்ததினால் நம்முடைய பாவங்களை கழுவி தேவனோடு ஒன்றாயிருக்க வழிவகுத்தார்.

பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் நம்மோடிருக்க நமது இருதயத்தில் தந்தருளினார்.

நாம் பரிசுத்த ஆவியானவரை மனதார அழைக்கும் பொழுது நம் இருதயத்தில் வாசம் செய்கின்றவராய் இருக்கிறார்.

**எனக்கு தேவனாகிய கடவுள் யார்?**

தேவன் பரலோகத்திலிருக்கின்ற நம்முடைய அன்புடைய தகப்பன்

நாம் பொதுவாக தேவனை, நம்மை படைத்தவரென்றும், நாம் அவர் படைப்புகள் என்றும் காண்கிறோம். இந்த உண்மையில் மேலும் பல அர்த்தங்கள் அடங்கி உள்ளன.

தேவன் நம்முடைய தகப்பன், நாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம். எப்படியெனில் நாம் இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேப் பேறான குமாரன் என்று விசுவாசிக்கும் பொழுது நாம் தேவனோடுஒருமித்து அவருடைய பிள்ளைகளாக மாறுகிறோம்.

ஆகவே கிறிஸ்துவின் மூலமாக நம்மை படைத்தவரை “அப்பா” என்று அழைக்க உரிமை பெறுகிறோம்.

**தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றார்?**

தேவன், அவர் நம்மை நேசிக்கிறார் என்று அறிய விரும்புகிறார். நாம் அவரை தகப்பனை போல நேசிக்கவேண்டும் என்று எதிர்பார்கிறார். நம் ஒவ்வொருவருக்கும் பெரிய திட்டங்களை வைத்திருக்கிறார் என்று அறிந்து கொள்ள விரும்புகிறார். நாம் அவரிடம அன்புகூர்ந்து, அவரை நெருங்கி, அவரோடு கூடிய உறவை பலப்படுத்த விரும்புகிறார்.

தேவன் எதை விரும்புகிறார் என்றால், தேவனோடு தனிமையிலும், ஜெபத்திலும் நேரத்தை செலவளிப்பதுமல்லாமல் , அவரோடு பரிந்து

உறையாடியும், அவரது வழிக்காட்டலை தேடியும், இன்னும் அவரை நெருக்கமாக தெரிந்துக் கொள்ளவும் வேண்டும் என்பதே.

**நம் வாழ்க்கையின் நோக்கம் என்ன?**

நமது வாழ்வின் நோக்கம் தேவனுடைய சித்தத்தின்படி செய்வதே

தேவனுடைய சித்தம் என்னவெனில் நாம் அவரை அன்புகூர்ந்து, அவரை மேலும் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அவர், நம் மேல் வைத்திருக்கிற அன்பு, வார்தைகளால் விவரிக்க முடியாததும், கற்பனைக்கும் மேலானது என்று அறிய விரும்புகிறார்.

நாம் அவரிடம் எப்படி அன்புசெலுத்தவேண்டும், அவருக்கும் மற்றவர்களுக்கும் எப்படி பணியாற்ற வேண்டும், மற்றும் நம் வாழ்க்கையில் வெற்றி பெரும் வழிகளை அறிந்துக் கொள்ள அவருடைய புனித சன்னிதானத்தில் அதிக நேரம் செலவிட வேண்டும்.

**நாம் கடவுளிடம் எப்படி நெருங்கி வர முடியும்?**

நாம் தேவனுக்கு நம் வாழ்வில் முதலிடம் கொடுத்து, அவருடைய சன்னிதானத்திலே நேரத்தை செலவளித்து, வேதாகமத்தை வாசித்தும், வேதவார்த்தைகளை தியானித்தும், அவரிடம் ஜெபத்தை அனுதினமும் ஏறெடுத்து, அவரை கிட்டி சேரமுடியும்.

முக்கியமாக ஒவ்வொரு நாளும் அவருக்காக, நேரத்தை ஒதுக்கி, அவருடைய பிரசன்னத்தில் நேரத்தை செலவழிப்பது, நம் வாழ்வில் முதன்மையாக இருக்கவேண்டும்.

**தனிமை என்றால் என்ன? 'அமைதியான நேரம்' என்றால் என்ன?**

இங்கு தனிமை என்பது தேவனுடைய பிரசன்னதிலே, அவருடைய பாதபடியில் நேரத்தை செலவளிப்பது. தேவன் நம் மேல் அன்பாயிருக்கிறார். நாம் அவருடைய அன்பை உண்ர்ந்து அவரோடு சஞ்சரிக்க நம் தேவன் (நேரத்தை செலவளிப்பது)விரும்புகிறார்.

பொதுவாக, நமக்கு தேவை ஏற்ப்படும் பொழுது மட்டுமே கடவுளை தேடுகிறோம். தேவனுய விருப்பம் என்னவென்றால் தேவை ஏற்படும் பொழுது மட்டுமன்றி, நம் வாழ்வில் நல்லது நடக்கும் பொழுதும் அவரோடு சஞ்சரிக்க விரும்புகிறார்.

நம் வாழ்வில் மிக முக்கிய நபராக இருந்து நமது சுகதுக்கங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறார். நாம் அவரோடு நம் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள், சவால்கள், வெற்றி தோல்விகள், இன்ப துன்பங்கள் எல்லாவற்றையும் விவாதிக்க விரும்புகிறார்.

அவர் நமக்காக வைத்திருக்கும் செல்வங்களையும், நன்மைகளையும் நமக்கு கொடுக்க அவரிடம், நம்மையும் நம்முடைய வாழ்வையும் சரணடைய வேண்டுமென்று விரும்புகிறார்

அதற்கு, அவரை நாடி, அவரோடு நேரத்தை செலவிட்டு, அவரை அறிந்தும் அவருக்கு கீழ்ப்படிந்தும் இருக்க வேண்டும்.

**தேவனாகிய கடவுள் நமக்கு வைத்திருக்கும் திட்டம் என்ன? இரட்சிப்பு என்றால் என்ன?**

எல்லா மனிதரும் நித்திய வாழ்வை அடையவேண்டுமென்பது தேவனுடைய ஆசை.

மனிதர்கள் தேவனை எதிர்த்து பாவத்தில் விழுந்தார்கள். ஆனால் தேவன் அன்புள்ளவராய் இருபதினால், தீர்வுகண்டறியாத நம்பிக்கையில்லாத நிலையில் நம்மை விடவில்லை.

தேவன் தமது ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம் பாவதிற்குப் பலியாக சிலுவையிலே மரிக்க உலகதிற்கு அனுப்பினார்.

நாம் இயேசுவை விசுவாசித்து, நமது பாவங்களுக்காக வருத்தப்பட்டால், நம்மை மன்னித்து அவரோடு சேர்த்துக் கொள்வார்

நம் உள்ளத்திலே இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொண்டு அவர் நம்முடைய பாவங்களுக்காக சிலிவையிலே பலியாக மரித்து, உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிப்போமேயானால் தேவனுடைய விருப்பத்தின்படி, நம் பாவத்தின் விளைவால் ஏற்படும் நித்திய நியாய தீர்ப்பிலிருந்து இரட்சிக்கபடுகிறோம். வருங்காலத்தில் நித்தியமாக தேவனுடைய பிரசன்னத்தில் இருப்போமென உறுதி அளிக்கபடுகிறது. இதுவே இரட்சிப்பு.

**கடவுள் அவருடைய பிரசன்னத்திற்கு உண்மையிலேயே நம்மை அழைக்கிறாரா?**

தேவனுடைய பரிசுத்த சன்னிதானத்திலே நாம் அவரோடு நெருங்கி வசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். இயேசுவின் முதல் சீடர்கள் இயேசுவை அணுகி அவர் வசிக்கும் இடத்தை கேட்டபொழுது, வந்து பாருங்கள் என்று பதில் அளித்தார். அதுமுதல் அவருடைய சீடர்கள் அவரை பின்தொடர்ந்து அவரோடு வாழ்ந்து வந்தனர்.

தேவனுடைய அன்பு நேற்றும் இன்றும் சதாகாலமும் மறாதது.

இப்பொழுதும் நம்மிடம், தேவனை பற்றி அறிய ஆவலான மனமும், இருதயமும் இருந்தால், அவரோடு சஞ்சரித்து, அவரை அறிந்து கொள்ளவும், அவரது அன்பை அனுபவிக்கவும் நம்மை அழைக்கிறார்.

பாரமான சுமைகளை சுமந்து களைப்படைந்தவர்களை யாவரையும், "என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று இயேசு அழைக்கிறார்

வேதாகமத்திலே சொல்லியிருக்கிறபடி தேவன் நமக்கு தந்த மற்றொரு அற்புதமான சத்தியம்

வேதாகமத்திலே (பைபிளில்) குறிப்பிட்டுள்ள நமக்காக கொடுக்கப்பட்ட தேவனுடைய மற்றொரு வாக்குறுதி, "அவர் உங்கள் மீது அக்கறையாக இருப்பதால் உங்கள் கவலைகள் எல்லாவற்றையும் அவரிடம் சமர்பித்து விடுங்க்கள்

உண்மையிலேயே தேவன் அன்பானவர், அவருடைய பிரசன்னதிலே இருக்க நம்மை அழைக்கிறார்.

**இயேசுவை ஏன் வழிப்படுகிறோம்?**

இயேசு தேவனுடைய குமாரன் என்பதினால் அவரை வணங்குகிறோம். அவர் உலகிலே நமோடிருந்து , தேவனுடைய வழிகளை போதிக்கவும், நமக்காக மரிக்கவும் உலகிற்க்கு வந்தார்.

மற்றும் வியாதிகளிலிருந்தும், பாவத்தினால் விளையும் கடுங்கோபாக்கினையில் இருந்தும், தப்புவிக்க சிலுவையில் மரித்து நம் அன்பான தேவனோடு கூட்டிச் சேர்க்க வழிவகுத்தார்.

இயேசு கிறுஸ்துவின் மூலமாக நாம் எல்லாம் வல்ல தேவனை “அப்பா” என்று கூப்பிடமுடிகிறது.

**இயேசு கிறுஸ்துவினிடம் பிரார்த்தனை (ஜெபம்) செய்ய குறிப்பிட்ட நேரம் உள்ளதா?**

இல்லை, இயேசு கிறுஸ்துவினிடம் பிரார்த்தனை (ஜெபம்) செய்வதர்க்கு குறிப்பிட்ட நேரமோ அல்லது வாரத்தில் குறிப்பிட்ட நாட்களோ கிடையாது.

தேவனாகிய கடவுள் நாம் ஒவ்வொரு நாளும் அவருடன் நேரத்தை செலவிட வேண்டும் என்று விரும்புகிறார். நாம் ஒரு நாளில் எந்த நேரத்திலாகிலும் ஜெபிக்கலாம்.

நாம் காலையில் நாட்களை தொடங்கும் போதும், இரவில் படுக்கைக்கு செல்வதற்கு முன்பும் பிரார்த்தனை செய்வது, நல்ல பழக்கம்.

நம் நாட்களை தொடங்கும் பொது நம்மை ஆசீர்வதிக்கவும், இரவில், நாள் முடிவில் அவர் தந்த கிருபைக்காகவும், ஆசீவாதங்களுக்காகவும் நன்றி செலுத்தி ஜெபம் செய்யலாம்.

நாளின் முடிவு வேளையில் அன்று முழுவதும் நடந்தவைகளை சிந்தித்து பார்பதற்கு ஒரு நல்ல சமயம். இந்த சமயத்திலே அவர் தந்த ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்தவும், அவரிடம் நாம் அன்று செய்த தவறுகளுக்கு மன்னிப்பு கேட்கவும், ஜெபிக்கலாம். மற்றும் அடுத்த நாளில் நம்மை ஆசீர்வதிக்கவும் நம்மை வழிநடத்தவும் கோறி பிரார்த்தனை செய்யலாம்.

நம் சொந்தங்களுக்கும் நண்பர்களுக்கும் நம் அருகில் வாழ்பவர்கள் போன்ற எல்லோருக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும். நாம் மற்றவர்களுக்காக ஜெபம் செய்வதை , கடவுள் விரும்புகிறார். எனவே நாம் சிறிது நேரம் மற்றவர்களுக்காக பிரார்த்தனை மற்றும் அவர்களுக்காக பரிந்தும் தேவனிடம் பிராத்தனைகளை ஏறெடுக்கவேண்டும்.

**மாதவிடாய் சமயத்தில் கோவிலுக்கு போக கூடுமா?**

ஆம், மாதவிடாய் சமயத்தில் கோவிலுக்கு போகலாம். இது குறித்து எந்த விதிகளோ அல்லது கட்டுபாடுகளோ இல்லை. சிறுவர், பெரியோர், ஏழை பணக்காரர், நோயாளிகள் நலமானவர் யாவரும் சமமாக இயேசுவை அணுகமுடியும்.

இயேசு நம் மத்தியில் வாழ உலகுக்கு வந்தார். அவர் தேவனுடைய குமாரன் என்பதால் எங்கு வேண்டுமானாலும் பிறந்திருக்கமுடியும். ஆனால் வசதியான பணக்கார வீட்டில் பிறபதிற்கு பதில் ஒரு மாடுத் தொழுவத்தை தமது பிறப்பிடமாக தேர்ந்தெடுத்தார்,

செல்வந்தர்கள் அவரை பார்க்க வரும் முன் மேய்ப்பர்கள் அவரை பார்க்க அனுமதித்தார்.

**நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?**

பிரார்த்தனை (ஜெபும்) செய்வதற்க்கு குறிப்பிட்ட விதிமுறைகளோ வழிமுறைகளோ இல்லை. நாம் கைகளை கூப்பி அல்லது கைகளை திறந்தும் ஜெபிக்கலாம். நாம் முழங்காலிருந்தோ , உட்கார்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும், எந்த நிலையிலும் ஜெபிக்கலாம் ஏனெனில் இயேசு நம் இருதயத்தில் உள்ளதை மட்டுமே பார்க்கிறார்.

ஜெபம் செய்யும்போது தேவன் நம் யாவருக்கும் செய்த எல்லா நன்மைகளுக்காக நன்றி செலுத்தவும், துதிக்கவும் வேண்டும்.

அனுதின ஜெபத்தின் பகுதியாக சில குறிப்பிட்ட பிராத்தனைகளை உபயோகிக்கலாம். பிராத்தனை என்பது தேவனாகிய நம் தகப்பனிடத்தில் மனம் திறந்து பேசும் நேரம். நாம் பூமிக்குரிய அப்பாவிடம் பேசும் போது, என்ன பேச வேண்டும் எந்த வார்தைகளை பயன்படுத்த வேண்டும் என்று முன்னதாகவே தயார் செய்யாமல் இயல்பாக பேசுகிறோம்.

அவ்வாறே நம் மேல் அன்புகொண்ட பரம தந்தையை அணுகும் பொழுது தேவையான வார்த்தைகளையும் வாக்கியங்களையும் முன்னதாகவே தயார் செய்யாமல் இயல்பாகவே ஜெபம் செய்யலாம்.

மேலும் வேதாகமத்திலிருக்கும் வாக்குறுதிகளை தேவனிடத்தில் கோரி ஜெபம் செய்வது ஒரு நல்ல பழக்கம். நாம் பிராத்தனை செய்யும் பொழுது மற்றவர்களுக்காக பரிந்துரைப்பது தேவனுக்கு பிரியமான காரியம்.

## பிரார்த்தனை செய்ய வாரத்தில் குறிப்பிட்ட நாட்கள் என்று உண்டா?

இல்லை, பிரார்த்தனை செய்யவதற்கு குறிப்பிட்ட நாட்கள் கிடையாது. ஒவ்வொரு நாளும் சிறந்ததே. நாம் தேவனிடத்தில் அனுதினமும் ஜெபிக்க வேண்டும்

தேவாலயங்களில் ( கிறிஸ்தவ கோவில்கள்) ஞாயிறு தோரும் நடத்தப்படும் சிறப்பு ஆராதனைகளில் ஒரு சமூகமாக கலந்து வழிபட வேண்டும். நீங்கள் குறிப்பிட்ட நாளை முடிவு செய்து, பிரார்த்தனை குழுவாக கூடி ஒவ்வொருவருடைய தேவைகளுக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை செய்யலாம்.

## பிரார்த்தனை செய்யும் பொழுது குறிப்பிட்ட வசனங்களை உபயோகிக்க வேண்டுமா ? எப்போது செய்ய வேண்டும்?

குறிப்பிட்ட வசனங்களை சொல்லியும், சொல்லாமலும் பிரார்த்தனை செய்யலாம்.

ஜெபம் பண்ணும் பொழுது வேதாகமத்திலுள்ள வாக்குறுதிகளை கோரி பிராத்தனை செய்வது நல்ல பழக்கம். வேதாகமம் என்பது சத்திய வசனம். நாம் வேதாகமத்திலுள்ள வாக்குறுதிகளை விசுவாசித்து, நம்முடைய பிரார்த்தனை கோரிக்கைகளாக ஏற்றெடுக்கலாம். எதுவானாலும் அன்புடைய இயேசு நம் இருதயத்தை அறிந்தவர் நம் மனதை புரிந்தவர்.

பிரார்த்தனைக்கு குறிப்பிட்ட நேரம் எதுமில்லை. எப்போது வேண்டுமானாலும் அவரை பறறிக் கொள்ளலாம். நம்மால் எந்த நேரமும் அவரை அணுகவும், கிட்டி சேரவும் கூடும். கற்பனைக்கும் மேலாக, விவரிக்க முடியாத அளவுக்கு நம்மை நேசிக்கிறார்.

## பல்வேறு வகையான பிரார்த்தனைகள்(ஜெபங்கள்) என்ன?

நம்முடைய ஒவ்வொரு தேவைகளுக்கும் பல்வேறு வகையான பிரார்த்தனை உள்ளன.நமக்கு ஏற்கனவே தெரிந்த ஜெபங்களை பயன்படுத்தி கடவுளிடம் ஜெபம் செய்யலாம். இவைகள் "அமைக்கப்பட்ட பிரார்த்தனைகள்" (இந்த புத்தகத்தின் மூன்றாம்(3) பகுதியில் நீங்கள் பயன்படுத்த கூடிய பிரார்த்தனைகளை பார்க்கவும்) நம்முடைய சொந்த வார்த்தைகளினாலும், சொந்த வாக்கியங்களினாலும் கடவுளிடம் ஜெபம் செய்யலாம் நம்மால் வெளிப்படுத்த முடியாவிட்டாலும் தேவன் நம் எண்ணங்களையும், மற்றும் உணர்வுகளையும் அறிந்திருக்கிறார். நம் தேவன் அன்பானவர்.

நாம் பிற மக்களுக்காக பரிந்து பிரார்த்தனை செய்யவேண்டுமென தேவன் விரும்புகிறார். நம்மை போன்ற சூழ்நிலைகளில் இருக்கும் மக்களுக்காக பிரார்த்தனை செய்யும் பொழுது ( அவர்களை நமக்கு தெரியாமல் கூட இருக்கலாம்) தேவன் மிக்க மகிழ்ச்சி அடைகிறார்.

**நான் கவலைப்படும் சில நேரங்களில் பிரார்த்தனைகளில் கவனம் செலுத்த முடியவில்லை. நான் என்ன செய்ய வேண்டும்?**

நாம் கவலையோடு, மனபாரத்தோடு இருக்கும் பொழுது தேவன் உன்னை ஆசீர்வதித்த நேரங்களை ஞாபகப்படுதிக்கொள். உன் மேல் பொழிந்த எல்லா ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்து. நம்முடைய ஆண்டவரும் நம்முடைய அன்பு தகப்பனாய் இருப்பதற்காக போற்றி துதி. அவருடைய மக்களை எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்று நினைத்து பார். வேதாகமத்தில் உள்ள கதைகளில் அவரது ஜனங்களை எப்படி ஆசீர்வதித்தார் என்று யோசித்து பார்.

(உதாரணமாக : எகிப்திலிருந்து இஸ்ரவேலரை வெளியே கொண்டு வந்து, செங்கடலில் ஒரு வழி செய்து, பாலைவனத்திலே அவர்களுடைய பயணங்ககளில் கூட இருந்து. பகலிலே மேகத் துணாகவும், இரவிலே நெருப்புத் துணாகவும் வழி நடத்தியும், உணவும், தண்ணீரும் அவர்களுக்கு கொடுத்து- ஆகியவை) தேவனை மேலும் துதித்து, நன்றி செலுத்து.

நீ அவ்வாறு துதித்து, நன்றி செலுத்தும் பொழுது உன் மனநிலையிலும், உண்ர்விலும் ஒரு மாற்றத்தை காண்பாய். இன்னும் திறம்பட தேவனை நோக்கி பிராத்தனை செய்யமுடியும்.

**உபவாசம் (விரதம்)ஏன் முக்கியமானது?**

உபவாச ஜெபத்தின் மூலம், தேவனோடு நெருங்கி வர முடியும். நாம் ஒழுங்காக உபவாசிக்கும் பொழுது, ஆண்டவரோடு நெருங்கி வருவது மாத்திரம் அல்லாமல், அவருடைய சித்ததை இன்னும் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. ஆண்டவரோடு நமக்குள்ள உறவை உபவாசம், மேலே அடுத்த நிலைக்கு எடுத்து செல்கிறது.

**எப்படி உபவாசிக்கவேண்டும்?**

உபவாசங்களில் பலதரப்பட்ட வகைகளும் வெவ்வேறு காலங்ககளும் உண்டு, உபவாசிக்கும் வகையும் உபவாசிக்கும் நேரங்களும் மாறுபடலாம். உபவாசம் அரை நாள். ஒரு வாரம், நாற்பது நாள், அதற்கு மேலும் நீட்டிக்கலாம்

புதிதாக தொடங்குகிறவர்கள் வாரம் ஒரு முறை ஒரு அரை நாள்(அதாவது காலை மற்றும் மதிய உணவு) உபவாசிக்க திட்டமிட்டு கொள்ளலாம். உபவாசம் செய்யும் பொழுது நீர் குடிப்பதை தவிர்க்க வேண்டும் என்று அர்த்தம் இல்லை. உண்மையில் விரதநாட்களில் அதிகமாக தண்ணீர் குடிக்கவேண்டும்

உபவாசநாட்களில் அதிக நேரம் பிரார்த்தனையில் கழிக்க வேண்டும். மதியமோ அல்லது சாயங்காலமோ விரதத்தை முடித்து கொள்ளலாம். பலர் மதியம் மூன்று மணிக்கு விரதத்தை முடிப்பார்கள். ஏனெனில் அந்த வேளையிலேதான் நமது ஆண்டவர் பாவத்தின் கோபக்கிணையிலிருந்து நம்மை இரட்சிக்க சிலுவையிலே மரித்து சாவை வென்றார்.

ஒரு குழுவாக உபவாசம் (விரதம்) செய்வது மிகவும் சக்திவாய்ந்தது. மக்கள் ஒன்றாக கூடி உபவாசித்து, ஒருவருக்கொருவரின் தேவைகளுக்காக பரிந்து பிரார்த்தனைகளை ஏறெடுக்கலாம்.

பல்வேறு வகையான விரதங்களை பற்றி மேலும் அறிய நீங்கள் இணையதளத்தின் (இன்டர்னெட்) மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**"மூன்றாம் மணி" பிரார்த்தனை என்ன?**

மதியம் "மூன்றாம் மணி நேரம்" பெரும் கருணையின் நேரம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் நமக்காக மரித்து உலகத்தை மீட்கப்பட்ட நேரமாக கருதபடுகிறது. தேவன் உலகை நித்தியமாக மாற்றி அமைத்த நேரம் இது.

"மூன்றாம் மணி" நேர பிரார்த்தனை" என்னையும், உன்னையும் எல்லாரையும் இரட்சிக்க சிலுவையிலே பலியாகின நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கருணையை நினைவூட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவின் கருணையே அவர் நம் மேல் வைத்திருக்கும் அன்புக்கு ஆதாரம்.

**வேதாகமம் என்பது (பைபிள்) என்ன?**

வேதாகமம் என்பது கடவுள் தன் அன்பை வெளிப்படுத்தும் கதை. அவரது குழந்தைகளை எப்படி நேசிக்கிறார் என்பதை தெரியப்படுத்தும் அன்பு கதை. நாம் யாவரும் தேவனுடைய பிள்ளைகள். நீங்கள் வேதாகமத்தை (பைபிள்) வாசிக்கையில், நமக்கு தேவன் வைத்திருக்கும் அற்புதமான திட்டங்களை பற்றி அறிந்து கொள்வீர்கள்.

தேவன் எவ்வாறு எல்லாவற்றையும் படைத்தார், நம் மேல் எப்படி அன்புகூறுகிறார், நம்மிடம் ஆவலாய் எதிர்பார்பது என்ன, எதற்காக இயேசுவை மரிக்க உலகுக்கு அனுப்பினார், நமது அனுதின வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனைகள், போதனைகள் என்ன, இன்னும் பல சுவாரசியமான, ஊக்கமளிக்கும் சத்தியங்களை வேதாகமத்தில் தேவன் விளக்கியிருக்கிறார்.

வேதாகமம் என்பது பல நூல் ஆசிரியர்கள், பரிசுத்த ஆவியானவரால் தூண்டபட்டு எழுதிய பல புத்தகங்கள் கொண்ட தொகுப்பு. எனவே வேதாகமம் தேவனுடைய வார்த்தை.

வேதாகமத்தில் (பைபிள்) உள்ளடங்கியவை

- கடவுளுடைய அன்பை வெளிப்படுத்தும் கதைகள்
- கிறிஸ்துவுக்குள் அடங்கிய நம்முடைய அடையாளம்
- உண்மையான வரலாற்று கதைகள் உள்ள அற்புதமான தொகுப்பு
- இயேசுவின் ஜீவியம்
- ஊக்கமளிக்கும் தேவனுடைய வாக்குறுதிகள்

- அனுதின வாழ்க்கைக்குறிய ஆலோசனைகளும் போதனைகளும்(வாழ்க்கைக் குறிய ஆலோசனை புத்தகம்)
- வேதனையிலும், பிரச்சனைகளிலும், மனம் கசந்த நேரத்திலும், தேவனுடைய அசைக்கமுடியாத அன்பு

**வேதாகமத்தில் (பைபிளில்) கடவுளுடைய அன்பை வெளிப்படுத்தும் கதை என்பது என்ன?**

பைபிள் கடவுளுடைய அன்பை வெளிப்படுத்தும் கதை. இந்த நேசகதையில் தம் ஜனங்ககளை எவ்வாறு நேசிக்கிறார் என்று எழுதப்பட்டு இருக்கிறது.

வேதாகமத்தில் (பைபிளில்) தேவன் வானத்தையும் பூமியையும் எப்படி உருவாக்கினார், மனிதனை எப்படி படைத்தார், அவருக்கு நம் மேல் உள்ள அன்பு, எதற்காக இயசுவை நமக்காக மரிக்க அனுப்பினார், எப்படி அனுபப்பட்டார், நமக்காக வைத்திருக்கும் அற்புதமான வாக்குறுதிகளும், திட்டங்களும் என்ன என்பவை கூறப்பட்டு இருக்கிறது

வேதாகமத்தில் (பைபிளில்)_பழைய ஏற்பாட்டு புத்தகத்தை படிபீர்களானால் தேவன் எவ்வாறு தாம் நேசித்த ஜனங்களை எகிப்திலிருந்து புறப்படசெய்து அடிமைத் தனத்திலிருந்து விடுவித்து, செங்கடலின் நீரை பிரித்து, தம் ஜனத்திற்கு எந்த தீங்கும் வராதபடிக்கு, கடலை கடப்பதற்கு, கடலின் நடுவில் ஒரு பாதை அமைத்து, பகலிலே மேகத் தூணினாலும், இரவிலே நெருப்புத் தூணினாலும் அவர்களை காத்து வழி நடத்தினார் என்று வாசிக்கலாம்.

அல்லாமலும், தம் நேச மக்களுக்கு வானத்திலிருந்து புசிக்க உணவும், பாறையிலிருந்து குடிக்க நீரும் அளித்த கதைகளை வாசிக்கலாம். வேதாகமத்தில் (பைபிளில்) மக்கள் எவ்வாறு தேவனுக்கு கீழ்படியாமல் அவரை புண்படுத்தினார்கள் என்றும் இருக்கிறது. ஆனால் தேவன் அவர்கள் மேல் உள்ள அன்பினாலே எப்பொழுதும் அவர்களை மன்னித்து ஆசீர்வதித்தார், இஸ்ரவேலர் நாற்பது வருடம் வனாந்திரத்தில் (பாலைவனத்தில்) சுற்றி திரிந்தபொழுது, அவர்கள் கால்கள் வீக்கமடையவில்லை, அவர்கள் உடைகள் பழையதாகவும் இல்லை.

இவைகள் வேதாகமத்தில் (பைபிளில்) உள்ள ஒரு சில கதைகள். நீங்கள் வேதாகமத்தில் (பைபிளில்) இன்னும் பல அற்புதமான கதைகளை படிக்கலாம்.

**வேதாகமம் (பைபிள்) உண்மையானதா?**

ஆம், வேதாகமம் (பைபிள்) உண்மையானதே. வேதாகமம் (பைபிள்) தேவனின் வார்த்தைகள். மக்கள் பலர் வேதாகமத்தில் (பைபிளில்) உள்ளவைகள் சரியாக கூறப்பட்டு இருக்கிறதா என்று விவாதிக்கலாம். மக்களால், எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு கடந்த காலங்களில் ஏற்கனவே பதிலளிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக தொல்லியல்வ் (தொல்பொருள் ஆராய்ச்சி) சான்றுகள், வரலாற்று(சரித்திர) பதிவுகள் போன்றவைகளை கண்டெடுத்த பொழுது பல கேள்விகளுக்கு பதில்கள் கிடைத்தன. அறிவியல் (விஞ்ஞானம்) சம்மந்தப்பட்ட பல கேள்விகளுக்கு, வெளிபட்ட அறிவியல்(விஞ்ஞானம்) ஆதாரங்கள்

பதிலளளித்தன. மக்கள் வேதாகமத்தில் (பைபிளில்) குறிப்பிட்டவைகளை இந்த ஆதாரத்தோடு இணைத்து புரிந்து கொள்ளமுடிகிறது.

அதேபோல வருங்காலத்திலும், (பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளின் துல்லியம் பற்றி) புதுபுது அறிவியல் விவரங்கள், மற்றும் சரித்திர சான்றுகள் மக்களுக்கு கிடைக்கும் பொழுது பல கேள்விகளுக்கு பதில் கிடைக்கும்.

ஆண்டவருடைய அன்பையும், அவருடைய வார்த்தைகளையும் வேதாகமத்தையும் விசுவாசிப்பதே நமக்கு முக்கியம். எல்லா கேள்விகளுக்கும் அவருடைய நேரத்தில் பதில் அளிக்கப்படும். நாம் தேவனாகிய கடவுளை நம்பி அவர் மேல் விசுவாசமாய் இருக்க வேண்டும்.

நாம் வேதாகமத்தை (பைபிளை) எப்படி படிக்க வேண்டும்?

வேதாகமம் (பைபிள்) பல்வேறு புத்தகங்களை கொண்ட ஒரு தொகுப்பு ஆகும். சில புத்தகங்களில் கதைகளும், சில புத்தகங்களளில் பகுத்தறிவுள்ள அறிவுரைகளும், சில புத்தகங்களில் கவிதைகளும், சில புத்தகங்களில் குறிப்பிட்ட போதனைகளையும் உள்ளடங்கியது.

சில புத்தகங்கள் நமக்கு இயசுவை பற்றியும், அவர் உலகத்தில் செய்த சேவைகளை பற்றியும், தெரிவிக்கின்றன. சில புத்தகங்கள் நம்மை ஊக்கமளிப்பதாகவும், சில புத்தகங்கள் வருங்காலத்தில் வரும் சம்பவங்களை கண்ணோட்டமாக தெரியப்படுத்துகிறது.

வேதாகமத்தை (பைபிளை) முதலிருந்து கடைசிவரை ஒரு தடித்த கதை புத்தகமாக கருதி வாசிக்க முயற்சி செய்தீர்களேயானால் நிச்சயமாக ஒரு சில நாட்களில் சுவாரசியத்தை இழந்துவிடுவீர்கள்.

ஆகையால் நீங்கள் என்ன தெரிந்து கொள்ள வேண்டும், எதை தேடுகிறீர்கள் என்பதை பொருத்து வேதாகமத்தை எதை, எப்படி வாசிப்பது என்று தெரிந்து கொள்வது நல்லது.

வேதாகமத்தில் (பைபிள்) இரண்டு பிரிவுகள் உள்ளன. பழைய ஏற்பாடு (இயேசுவுக்கு முன் காலம்) மற்றும் புதிய ஏற்பாட்டு ( இயேசுவின் காலமும் , இயேசுவின் பின் காலம்).

நீங்கள் தேவனாகிய கடவுளின் படைப்பை பற்றியும், பழைய வரலாற்று நாட்களில் அவரது மக்கள் பற்றிய கதைகளை படிக்க வேண்டும் என்றால், நீங்கள் பழைய ஏற்பாட்டில் (உதாரணமாக ஆதியாகமம், யாத்திராகமம், யோசுவா, முதலியன) உள்ள புத்தகங்களை படிக்கலாம்.

நீங்கள் இயேசுவை பற்றிய கதைகள், அவர் எவ்வாறு சபைகளை நிறுவினார் என்பதை வாசிக்க விரும்பினால், புதிய ஏற்பாட்டில் உள்ள முதல் ஐந்து புத்தகங்களை(மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் அப்போஸ்தலர்) படித்து அறியலாம். நீங்கள் தேவனை பாடி துதிக்க விரும்பினால் சங்கீத புத்தகம் மூலம் படித்து தியானம் செய்யலாம்.

**வேதாகமம் (பைபிள்) வசனங்களை எப்படி தியானிக்க வேண்டும்?**

வேதாகமம்(பைபிள்) தேவனாகிய கடவுளின் வாக்குறுதிகளால் நிறைந்திருக்கிறது. நாம் வேதாகமத்தை வாசிக்கும் பொழுது , குறிப்பிட்ட வசனங்கள் நம் கவனத்தை ஈர்க்கலாம். அந்த நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் அவைகளை நமக்கு கற்பித்து வழிநடத்த நாம் ஜெபம் செய்யவேண்டும். தேவன் நமக்குரிய வாக்குறுதிகளையும் திட்டங்களையும்,, அவருடைய சித்தத்தையும் வெளிப்படுத்துவார்.

நாம் வேதாகமத்தை, அவருடைய வார்த்தைகளை நம் மனதில் விசுவாசத்துடன் வாசிக்க வேண்டும்.

## வேதாகமத்தில் (பைபிள்) உள்ள கடவுளுடைய சக்தி வாய்ந்த சில உறுதிமொழிகள் என்ன?

வேதாகமம் (பைபிள்) கடவுளுடைய உறுதி மொழிகளால் நிறைந்திருக்கிறது. இந்த புத்தகத்தின் இரண்டாம் (2) பிரிவில் (பிரார்த்தனை பிரிவில்) சில உதாரணங்களை தெரிந்துகொள்ளலாம். இந்த பிராத்தனைகளில் தேவன் நமக்களித்த வாக்குறுதிகள் உள்ளடங்கியுள்ளன. கடைசி பகுதியில் குறிப்பிட்ட வேதவசனங்களும் சொல்லப்பட்டு இருக்கிறது. தேவனுடைய ஆசீர்வாதம் உங்களை வல்லமையாக தொடும்படிக்கு இந்த வசனங்களை படித்து, தியானம் செய்யது, பிராத்தனை செய்யலாம்.

## இயேசு துடிதுடித்து இறந்தார். அவர் கடவுளாக எப்படி இருக்க முடியும்?

வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவர் நமது அன்பான பரமதகப்பன். இயேசு தேவனுடைய குமாரன். தேவன் நம் மேல் உள்ள அன்பினாலே, நமது பாவத்திலிருந்தும், நித்திய மரணத்திலிருந்தும் தப்புவிக்க அவருடைய குமாரனாகிய இயேசுவை பலி ஆடாக சிலுவையிலே மரிக்க அனுப்பினார். தேவனை தவிர பாவத்திலிருந்தும், மற்றும் நித்திய மரணத்திலிருந்தும் யாரால் நம்மை காப்பாற்ற முடியும்?

எத்தனையோ மக்கள் இயேசுவை அறியாத வேளையில், உனக்காகவும், எனக்காகவும் நம் ஒவ்வொருவர்காகவும் மரித்த இயேசுவுக்கு மேல் நம் மேல் அன்பு செலுத்த வேறு யாரால் முடியும்?

இயேசு நம் ஒவ்வொருவரையும் இரட்சிக்க மரித்தார். நம்மில் பலருக்கு இதுகூட தெரியாது. .அவரை விட யாரால் நம்மை நேசிக்க முடியும்?

## தேவன் எல்லாம் வல்லவர். அவருடைய சக்தியினாலே நமது பாவங்களை மன்னிக்கமுடியும். எனவே இயேசு ஏன் நமக்காக சாக வேண்டும்?

நம்முடைய பிதாவாகிய தேவன் அன்பானவர். நம் ஒவ்வொருவர் மேல் வைத்திருக்கும் அன்பை வார்த்தைகளினால் விவரிக்க முடியாது. ஆனாலும் அவரது கொள்கைகளுக்கும் உண்மையாக இருக்கிறவர். அவருடைய நீதி நியாயத்தின் படி பாவிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தேவைப்படுகிறது. அதே நேரத்தில், நம் மேல் அளவற்ற அன்பையும் வைத்திருக்கிறார். அவருடைய அன்பும் கருணையும் பாவிகளாகிய நம்மை

விடுவிக்க கோருகிறது. இந்த தேவைகளை பூர்த்தி செய்ய, நம்முடைய இடத்திலிருந்து, நம் பாவத்தின் விளைவுகளை ஏற்று கொள்ள நமது இரட்சகர் இயேசுவை உலகத்திற்கு அனுப்பினார். இத்தகையது நமது தேவனுடைய அன்பு! இந்த அன்புக்கு சமமாக யாரால் முடியும்.

### இயேசு மரணத்தை எவ்வாறு மேற்கொண்டார்? உயிர்த்தெழுதல் என்றால் என்ன?

நம் பாவங்கள் மன்னிக்கப்படவும் கழுவப்படவும் நம்முடைய இடத்தில் சிலுவையில் அறைய கர்த்தராகிய இயேசு தன்னை ஒப்புக்கொடுத்தார். அவர் நம் இடத்தில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். அவர் மரணத்தை மேற்கொண்டு மூன்றாம் நாள் உயிருடன் திரும்பவும் வந்தார். இதுவே உயிர்த்தெழுதல்.

உயிர்த்தெழுந்த பிறகு, அவர் நாற்பது நாட்கள் அவரது சீடர்களுடன் இருந்து, பின்பு பரலோகத்துக்கு மேலெழுந்தார். அவர் மகிமையோடே உலகுத்துக்கு திரும்பவும் வருவார்.

இயேசு நமது இரட்சகர். அவருடைய பரிசுத்த நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவர்கள் இரட்சிக்கபடுவார்கள்.

### இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சிறப்பு என்ன? இயேசு கிறிஸ்துவின் தனித்துவம் என்ன?

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன். இயேசுவை பற்றிய தனிப்பட்ட விஷயங்கள் பல உள்ளன. ஒரு தெய்வீக வாழ்க்கை நமக்கு வாழ்ந்து காட்ட பூமிக்கு வந்தார். அவர் கன்னியாகிய மரியாளிடம், ஒரு மாட்டு தொழுவத்திலே பிறந்தார். அவர் பூமியில் இருந்தபோது, அவர் கடவுள் என்பதால் உலகிலுள்ள எல்லா செல்வங்களையும் தன் ஆடம்பரத்திற்காக தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆனால் சாதாரண மக்களோடு, தாழ்மையான வாழ்க்கையை தேர்ந்தெடுத்தார். நம்மோடு சேர்ந்துவாழ ஆசைப்பட்டார்.

அவனர் பிறந்த போது தேவதூதர்கள் பாடி கொண்டாடினார்கள். ஒரு தனிசிறந்த நட்சத்திரம் அவரது கீர்த்தியை பிரஸ்த்தாபிக்க விண்ணிலே பிரகாசித்தது. மற்றும் ஞானிகள் பலர் வெகு தூரத்திலிருந்து அவருக்கு மரியாதை செலுத்துவதற்காக வந்தனர்.

அவர் பாவங்களுக்கு விலகி, சோதனையை தவிர்த்து தெய்வீக வாழ்க்கையை வாழ நமக்கு காட்டிக் கொடுத்தார். அவர் பாவம் மற்றும் மரணத்திலிருந்து என்றென்றைக்கும் நம்மை மீட்பதற்கு சிலுவையில் இறந்தார்.

வேறு எங்கே நீங்கள் கடவுள், நம்மை காப்பாற்றி, அவரை நெருங்கி வந்து எப்போதும் நாம் அவருடன் இருக்கும் படியாக நமக்காக இறந்தார் என்று கேள்விப்பட்டு இருக்கிறீர்கள்?

இயேசுவின் கருணையும், சிலுவையில் அவரது மரணமும், நமது பரமதந்தையின் அன்பை நிரூபிக்கிறது.

மூன்றாவது நாள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது அவர் மரணத்தை வெற்றி கொண்டார் என்பதை நிரூபிக்கிறது. எல்லாவற்றிற்கும் அவர் தான் பதில்.

அவர் நம்மை குணப்படுத்துபவர், நம்மை பாதுகாப்பவர், நம் எஜமானர், நம் தேவன், , நம் நண்பர், நமக்கு வழிகாட்டி, நம் சகோதரர், நம்முடைய ராஜா, நம் ஆண்டவர் என்று மேலும் பட்டியல் போட்டுகொண்டே இருக்கலாம்.

தெய்வங்களின் முன்னிலையில் மக்கள் தங்களின்  சிறந்த காணிக்கையை கொடுக்க முனைகிறார்கள். தேவனுடைய குமாரனாகிய இயேசு இந்த வகையான காணிக்கையை விரும்புவதில்லை. இயேசு நாம் அவரிடம் நம் பிரச்சினைகள், நம் நொறுங்கிய நிலை, நம் வியாதிகள், நம் துக்கங்களை கொண்டுவர விரும்புகிறார். ஏனெனில் அவை எல்லாவற்றையும் நம்மை விட்டு எடுத்துவிட்டு நம்மை தம் கிருபையினாலும், இரக்கத்தினாலும்,அன்பினாலும் நிரப்ப விரும்புகிறார்.

## கிறிஸ்துவின் இரத்தம் பற்றிய சிறப்பு என்ன?

## ஏன் மக்கள் எப்பொழுதும் கிறிஸ்துவின் இரத்தத்தை பற்றி பேசுகிறார்கள்?

கிறிஸ்துவின் இரத்தத்திற்க்கு மிகவும் சிறந்த முக்கியத்துவம் உண்டு. ஒருவனோ/ஒருத்தியோ, இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, இயேசுவை  இரட்சகராக ஏற்றுக் கொண்டால், கிறிஸ்துவின் இரத்தம் அவர்களது பாவங்களை கழுவி நித்திய மரணத்திலிருந்து இரட்சிக்கிறது.

மோசேயின் சட்டம் விதிமுறைகளை (பழைய ஏற்பாட்டில் பண்டைய நாட்களில்) கடைபிடித்த போது, ஆண்டுக்கு ஒரு முறை, பூசாரி மக்களின் பாவங்களுக்காக மன்னிப்பு பெற கோவில் (ஆலயம்) பீடத்தில் விலங்குகளின்(மிருகம்) இரத்தத்தை காணிக்கையாக படைத்தார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த விலங்குகளின் இரத்தத்தை  காணிக்கையாக படைத்தார்கள். சட்டப்படி, இரத்தம் சிந்தாமல் எதற்கும் மன்னிப்பும் இல்லை.

இயேசு நம் மேல் உள்ள கருணையால் சிலுவையில் பலியாகி, இரத்தம் சிந்தி நம் பாவங்களை முற்றிலும் நம்மை விடு நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.

நாம் அவரை விசுவாசித்து மனந்திரும்பி, நமது பாவங்களை அவரிடம் அறிக்கையிட்டால் அவர் நம்மை மன்னித்து அவரது விலையேரப்பட்ட இரத்தத்தினாலே நம் பாவங்களை கழுவும் போது நம் நித்திய இரட்சிப்படைகிறோம்.

நம் பாவங்களுக்கென்று  முழு பரிகாரமாக இயேசு சிலுவையில் பலியாக மரித்ததை "கிறிஸ்துவின் இரத்தம்" என்ற வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது.

இயேசு உனக்காகவும், எனக்காகவும், நம் எல்லோருக்காகவும், இரத்தம் சிந்தி மரித்தார். நாம் பாவிகள், நம் இயேசுவை இரட்சகராக ஏற்றுகொள்ளும்பொழுது மீட்கப்படுகிறோம்.

கிறிஸ்துவின் இரத்தம் ஆபத்தில் இருந்து நம்மை பாதுகாக்கிறது.

**இயேசுவையும் மற்ற தெய்வங்களை வணங்கினால் இயேசு என்ன நினைப்பார்? இயேசுவின் உணர்வுகள் என்ன?**

நீங்கள் நேசிக்கிற நபர் அவர் அன்புக்கு நீங்கள் அருகதை ஆக இருந்தும் நீங்கள் விரும்பும் அளவிற்கு உங்களை நேசிக்கவில்லை என்றால் எப்படி நினைப்பீர்கள்? நீங்கள் வருத்தப்படுவீர்கள். ஆனால் இன்னும் தொடர்ந்து அவரை நேசித்து நம்பிக்கையோடு காத்திருப்பீர்கள்.

அவ்வாறே நம் வாழ்க்கையில் இயேசுவுக்கு, முதல் இடத்தை கொடுக்கா விட்டால் வேதனைபடுகிறார். இயேசு நம் இதயங்களை, மற்றும் மனதையும் அறிந்திருக்கிறார்.

நாம் நமது அன்பான தகப்பனுக்கு நம் வாழ்க்கையில் முதலிடம் கொடுத்து அவரை நேசிக்காவிட்டாலும், நாம் ஒவ்வொருவரும் ஒரு நாள் சத்தியத்தையும் அறிவோம், சத்தியம் நம்மை விடுவிக்கும் என்று இயேசு பொறுமையாக காத்திருக்கிறார்.

**சிலுவையில் ஆணிகளால் அடிக்கபட்டு வலியோடு இருக்கும் இயேசுவை மக்கள் எப்படி வணங்க முடியும்?**

**இந்த வேதனையான காட்சியை வணங்கினால் இதயமற்றவன் ஆக காண்கிறதல்லவா?**

கடவுள் நம் மேல் உள்ள அன்பினால், தமது ஒரே பேறான குமாரனாகிய, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி பாவத்திலிருந்தும் நோய்கள் மற்றும், மரணத்திலிருந்தும் மீட்க்கும் பொருட்டு சிலுவையில் நமக்காக உயிரைக் கொடுத்தார் என்பதை சிலுவை நமக்கு நினைவூட்டுகிறது.

தேவன் நம்மை நேசிக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டால் நாம் எப்போதும் அவருடன் இருக்க முடியும் என்ற நற்செய்தியை வலியுருத்துகிறது.

சிலுவை நமக்கு அன்பையும், நம்பிக்கையையும் வலியுருத்துகிறது. நாம் அந்த கண்ணோட்டத்தில் சிலுவையை பார்க்கும் பொழுது சிலுவையின் முக்கியத்துவத்தின் உண்மையான அர்த்தம் புரிந்து கொள்ளமுடிகிறது.

நாம் மனதில் வைத்து கொள்ள வேண்டியது என்னவெனில் நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து சாவை வென்று உயிர்த்தெழுந்தவர். அவர் உயிருள்ள ஆண்டவர்.

**பல கிறிஸ்தவர் மேற்கத்திய கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.**

**இயேசு கிறிஸ்துவை நம்பினால் நானும் அவர்களை போல இருக்க வேண்டுமா?**

மாற்றம் இதயத்தில் மற்றும் மனதில் ஏற்படுகிறது. இயேசுவை விசுவாசித்தால் வெளிப்புற மாற்றங்கள் தேவையில்லை. இயேசுவை

விசுவாசித்து அவரோடு தனிமையிலே ஜெபத்தில் நேரத்தை செலவளிக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்மை கடவுளிடம் இன்னும் நெருங்கி வர வழிகாட்டுவார்.

சிலர் அவர்களின் சமூகத்தில், பண்பாட்டிலும் புதிய விஷயங்களை கடைபிடிக்கலம், ஆனால் அப்படி செய்ய எந்த கட்டாயமுமில்லை.

உலக விஷயங்கள் விட நம் மனதும் இருதயமுமே தேவனுக்கு முக்கியமானது.

**நான் இயேசுவை விசுவாசிக்கிறேன்.**

**என் வாழ்க்கை முறையில் ஏதாவது மாற்றிக்கொள்ள வேண்டுமா?**

ஆம். ஆனால் நீங்கள் உங்கள் வாழ்க்கை முறையை மாற்ற உங்களை கட்டாயப்படுத்தி கொள்ள வேண்டாம். நீங்கள் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்று கொண்டபின், உங்கள் இதயம், மனம், உயிர் மற்றும் நேரத்தை அவரிடம் ஒப்புகொடுங்கள். அவருடைய பிரசன்னத்தில் தனிமையில் அமைதியாக ஜெபத்தில் நேரத்தை செலவழியுங்கள். இந்த ஒழுங்கை நாம் பழக்கபடுத்தி கொண்டால், ஆண்டவரோடு, தனிப்பட்ட உறவுவை இன்னும் ஆழமாக வளர்க்க பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழிகாட்டுவார்.

**கிறிஸ்தவர்கள் தேவாலயத்தில் மது குடிக்கிறார்களா?**

இல்லை, இது கிறிஸ்தவர்கள் பற்றிய தவறான அபிப்பிராயம்.

நீங்கள், தேவாலயத்தில் ஆராதனைகளில் (வழிப்பாட்டில்) கலந்து கொண்டால் என்ன? அந்த வகையில் பிரசங்கம் கேட்கவும், வழிபாட்டு முறைகளை நேரில் கண்டு அதன் அர்த்தங்களை புரிந்து கொள்ளவும் முடியும்.

**ஆலயம் தேவனை வழிபடும் இடம்.**

**இந்த வழிபடும் இடத்தில் செருப்பு (காலனி)அணிந்து எப்படி நுழைய முடியும்?**

நாம் கிறுஸ்துவை இரட்சகராக ஏற்கும் போது, நாமே ஆலயமாக மாறுகிறோம், பரிசுத்த ஆவியானவர் நம் இதயத்தில் வாழ்கிறார்.

நாம் வெளிப்புற தூய்மையை கவனிப்பதை விட நம் இதயமும் மனமும் தூய்மையாகவும், பரிசுத்தமாகவும் இருக்கிறதா என்று நம்மையே கேட்டு கொள்வது அவசியம். நாம் இயேசுவை பின்பற்றும் போது இதயதிலும், மற்றும் மனதிலும் ஆண்டவரை பின்பற்றும் மனபாங்கே முக்கியம்.

ஒரு தேவாலயத்தில் நுழையும் போது பொதுவாக, காலணிகள் கழட்ட வேண்டிய அவசியமில்லை. பல சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் .ஆலயத்தை சுத்தமாக வைக்க, உள்ளே வருமுன் அவர்கள் காலணிகளை கழட்டி விட்டு வருவார்கள்.

### நான் கிறிஸ்துவைப் பின்பற்ற என்ன செய்ய வேண்டும்?

### நான் கிறிஸ்துவை விசுவாசித்தால் என்னென்ன விட்டு கொடுக்க வேண்டும்?

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, அவர் உங்களுக்காக பெரிய திட்டங்களை வைத்திருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் உங்கள் பிராத்தனைகளையும் மனுக்களையும் அவரிடத்தில் கொண்டு வாருங்கள். அப்போது அவர் நம்முடைய தேவன் நம்மை குணப்படுத்ததுகிறவர், நம் மீட்பர், நம் நண்பர், நம்மை விடுவிக்கிறவர் என்று உங்கள் இதயத்தில் அறிவீர்கள்.

உங்கள் தினசரி வாழ்வில், கடவுளின் பிரசனத்தில், பிராத்தனையில் (ஜெபத்தில்) சில நேரம் செலவிடும் ஒழுக்கத்தைக் கொண்டு வாருங்கள். வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும், வழிகாட்டும்படி இயேசுவிடம் ஜெபியுங்கள்.

பரிசுத்த ஆவியின் பெலத்தினால் உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை கொண்டுவர, நீங்கள் எதை விட்டு கொடுக்க வேண்டும் என்று வழிகாட்டும்படி பிராத்தியுங்கள்.

நீங்கள் உணவு, உடை, தங்குமிடம், கலாச்சாரம் இது போன்ற எதையும் விட்டு கொடுக்க தேவையில்லை. உங்கள் உள் இதயதிலும், உள் மனதிலும், ஏற்ப்படகூடிய மாற்றங்களில் கவனம் செலுத்தி இயேசு உங்களுக்கு வழி காட்ட அனுமதியுங்கள்.

### நாம் இயேசு கிறிஸ்து நம்பினால் என்னென்ன சடங்குகளை பின்பற்றவேண்டும்?

நமக்கும் கடவுளுக்கும் உள்ள நெருங்கிய உறவில் எது முக்கியம்? சடங்குகள் இரண்டாம் பற்றவை. நம்முடைய தேவைகளை தேவன் அறிந்திருக்கிறார். தினசரி உங்கள் வாழ்வில் கடவுளிடம் நேரம் செலவிடும் ஒழுக்கத்தைக் கடைபிடியுங்கள். பிராத்திக்கும் பொழுது குறிப்பிட்ட வகையை பின் தொடர வேண்டும் என்று அவசியமில்லை. நீங்கள் தேவனின் பிரசன்னத்தில் நேரத்தை செலவிட தொடங்கும் போது அவர் உங்களுக்கு வழிகாட்டுவார். அவரோடு சேர்ந்து செல்லும் பயணத்தை அனுபவிக்க ஆரம்பிப்பீர்கள்.

நீங்கள் இயேசுவை பற்றி இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும், மற்றும் உங்கள் மனதில் குறிப்பிட்ட சந்தேகங்கள் அல்லது கேள்விகளிருந்தால் அவரை பின்பற்றும் மற்றவர்களிடம் விவாதிக்கலாம்.

### அவசியம் ஆலயத்திற்க்கு செல்ல வேண்டுமா?

தேவனாகிய கடவுள் உங்களை நேசிக்கிறார். நீங்கள் கடவுளை நேசிக்கிறீர்களா? தேவனை தெரிந்துக் கொள்ளும் ஆவிக்குறிய வாழ்கையில் நீங்கள் செய்திருக்கும் முன்னேற்றம் உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும்

அளிக்கிறதா? அல்லது நீங்கள் மேலும் அவரை பற்றி அறியவும், அவரை நேசிக்கவும் விரும்புகிறீர்களா? நீங்கள் அவரை நெருங்கி வந்து அவரது கிருபை, ஆசீர்வாதங்களை உங்கள் வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டுமா?

ஒரு சடங்குக்காக ஆலயத்திற்க்கு செல்லாமல், தேவனுடைய அன்பை அனுபவிக்கவும் நமக்கு கடவளிடம் உள்ள தனிப்பட்ட உறவுக்காகவும் தேவாலயத்திற்கு செல்லுங்கள்.

ஆண்டவருடய அன்பை நீங்கள் மேலும் அனுபவிக்கும் பொழுது, தேவன் அவரோடு நடக்கும் பாதையில், வழிநடத்தி செல்வார்.

## சிலை வழிபாடு (விக்கிரக ஆராதனை அல்லது உருவ வழிபாடு) என்றால் என்ன?

தேவனை விட எவரையாவது அல்லது எதையாவது நேசிப்பது விக்கிரக ஆராதனை அல்லது உருவ வழிபாடு என்று அழைக்கப்படுகிறது. அதாவது ஒருவர் கடவுள் என்று எண்ணி ஒரு சிலையை போற்றி வணங்கலாம். அல்லது ஒருவர் புகழ் பெற்று பிரபலமடைந்தவரை எல்லாவற்றையும் விட ரசித்து போற்றலாம். ஒருவர் எலலாவற்றிக்கும் மேல் பணத்தை நேசிக்கலாம். இவை யாவும் விக்கிர ஆராதனைக்கு உதாரணங்கள்.

வானங்களையும் பூமியையும் படைத்த நமது தேவனிடத்தில் அன்புகூறவே நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம். தேவன் நமது அன்புத் தந்தை, நாம் அவரின் பிள்ளைகள்.

நாம் நம் வாழ்வில் அவரை எல்லாவற்றிக்கும் மேலே முதல் இடத்தில் வைக்க வேண்டும்.

**<u>ஏன் மக்கள் சிலைகளை வழிபடுகிறார்கள்?</u>**

**<u>மக்கள் ஏன் சிலைகளை வழிபட கூடாது?</u>**

மக்கள் பொதுவாக விஷயங்களை மற்றவர்கள் செய்வதை பார்த்தும், பெரியவர்களிடமும் கற்றுக்கொண்டும் பின்பறறுவார்கள்.

பெரும்பாலும், மக்கள் சடங்குகளை பற்றி கேட்பது இல்லை அவைகளின் பின் நோக்கத்தை புரிந்து கொள்ள முயற்சி செய்வதுமில்லை.

மக்கள் பலர் .சிலைகளை கடவுள் என்று தவறாக நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். அதினால் மக்கள் விக்கிரகங்ளிடம் பிராத்திக்கிறார்கள்.

நாம் எதை எதற்காக செய்கிறோம் என்று ஆராயத் தொடங்கிவிட்டால், உண்மையை தேட முனைகிறோம். பரம சத்தியம் தேவனிடத்தில் உள்ளது. நம்

இதயங்களில் பரம சத்தியத்தை தேடுவோமேயானால் தேவன் தன்னையும் தமது அன்பையும் மேலும் மேலும் வெளிப்படுத்துவார், சத்தியம் நம்மை விடுவிக்கும்.

நாம் நம் தந்தையாகிய கடவுளிடமே பிராத்திக்க முடியும் போது, சிலைகளிடம் பிராத்தனை செய்ய எந்த தேவை இருக்கிறது?

**பல மக்கள் சூரியனை, சந்திரனை, நட்சத்திரங்களை, கிரகங்களை, வழிபடுகிறார்கள். இயற்கை வழிபாடு தவறா?**

தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். வானத்திலும், பூமியிலும் உள்ள யாவையும் தேவனால் உருவாக்கப்பட்டது. இயற்கை, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மற்றும் கிரகங்கள் யாவையும் அவரது படைப்புகள். மக்கள் வணங்க வேண்டியது படப்பையா இல்லை படைத்தவரையா?

சில மக்கள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள் இவைகளை தேவர்கள் என்றும் அல்லது கடவுள் இவற்றில் வாழ்கிறார் என்றெல்லாம் நினைக்கிறார்கள்.

நம்மை உருவாக்கின அன்பு தகப்பனிடம் நாம் ஏன் கவனம் செலுத்த கூடாது? நம்மை உருவாக்கி, நம்மை நேசித்து, நம் அன்புக்காக ஏங்கும் நம் அன்பு தகப்பனை ஏன் வழிபடகூடாது?

**சில கிறிஸ்தவர் எப்போதும் பாவத்தை பற்றியே பேசுகிறார்கள்.**

**அவர்கள் கொடூரமானவர்கள். நாம் ஏன் பாவத்தை பற்றி விவாதிக்க வேண்டும்?**

தேவனாகிய கடவுள் தன் மகனாகிய, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் செய்த அனைத்துப் பாவங்களுக்கும் பலியாக சிலுவையில் மரிக்க அனுப்பினார். தேவனுடைய குமாரனாகிய இயேசுவை நமது ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும் பொழுது, ஆண்டவராகிய இயேசுவின் மரணபலியாலும், உயிர்த்தெழுதல் மூலமாகவும் நாம் நித்திய மரணத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் மீட்கப்படுகிறோம்.

இந்த சத்தியத்தை புரிந்து கொண்ட மக்கள் மற்றவர்களும் இரட்சிக்கப்பட, அவர்களோடு இந்த உண்மையை பகிர்ந்து கொள்ள மிகுந்த ஊக்கம் கொள்வார்கள். மற்றவரும் பாவத்திலிருந்து இரட்சிக்கபடவே மக்கள் பலர் பாவத்தை பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் பேசுகிறார்கள்.

**<u>அனைவருக்கும் பாவிகள் அல்ல.</u>**

**<u>ஆனால் அனைவரும் பிறப்பின் போது பாவிகள் என்று எப்படி சொல்ல முடியும்</u>?**

தேவனின் சொந்த சாயலிலே தேவனால் உருவாக்கப்பட்ட ஆதாம், ஏவாள் என்ற முதல் மனிதர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாததால் அவர்கள் மூலம் பாவம் பூமிக்கு வந்தது.

நாம் சிறுவர்களாய் இருக்கும்பொழுது மற்றவர்கள் மேல் அக்கறை கொள்ளவும், அவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் கற்பிக்கப்பட்டன. எப்போதும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் நமக்கு நாமே ஏதாவது வைத்து கொள்வது தவறு.

நாம் பேராசை பிடித்தவர்களாகவும் சுயநலவாதிகளாகவும் இருக்கிறோம். நீங்கள் சிறிய குழந்தைகளை கவனித்திருக்கிறீர்களா? நீங்கள் ஒரு குழந்தைக்கு ஒரு பொம்மை கொடுக்கும் போது, குழந்தை அதை இறுக்கமாக அதன் கையில் வைத்துக்கொள்ளுகிறது. நீங்கள் அதை எடுக்க முயற்சி செய்யும் போது, குழந்தை, எதிர்த்து பின் வாங்கி அழுகிறது. குழந்தை சுயநலவாதியா? இந்த குழந்தைக்கு யார் இந்த பழக்கத்தை கற்று கொடுத்தது? எவரும் இல்லை. அப்படியெனில் குழந்தை இந்த பழக்கத்தை எப்படி கற்று கொண்டது? இந்த உதாரணம் நாம் பிறப்பதற்கு முன்பே பாவம் நம் வாழ்வில் ஊடுருவி வருகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

நாம் நல்லவராக இருக்க முயற்சித்தும். நம் வழ்வில் சில சந்தர்ப்பங்களில் நம்மிடம் கெட்ட எண்ணங்கள் கோபம், பொறாமை, காமம், பொய் ,மற்றவர்களை நம் வார்த்தையினால் காயப்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் ஏற்படலாம். அதன் பின் பாவதிலிருந்து நித்தியமாக விடுதலை பெறவேண்டும் என்ற தேவையை உணரலாம். தேவனிடம் இருந்து கிடைக்கும் இந்த மன்னிப்பு இயேசு கிறிஸ்துவின் மூலம் மட்டுமே சாத்தியம்.

**நாம் பாவத்திலிருந்து இருந்து எப்படி விலகி இருக்க முடியும்?**

நாம் தேவனாகிய கடவுளுடன் இன்னும் நெருங்கி நடக்கும்பொழுது, எது சரி, எது தவறு என்று, நாம் மேலும் மேலும் புரிந்து கொள்ள முடியும்.

கடவுளுடைய புனிதத்தன்மை நம்மை பாவத்தில் இருந்து விலகி இருக்க உதவுகிறது.

நமக்கு கடவுளோடு இருக்கும் நெருங்கிய உறவுவை அபிவிருத்தி(மேலும் (வளர்ச்சி) செய்யவேண்டியது மிகவும் முக்கியமானது.

**நம்முடைய பாவங்கள் எப்படி மன்னிக்கப்படும்?**

இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார். நாம் அவர் தேவனுடைய குமாரன் என்று, விசுவாசித்து, அவரை நம் இரட்சகராக ஏற்றுக் கொண்டு, மனந்திரும்பி, நம் பாவங்களை அறிக்கையிட்டு, அவரிடம் மன்னிப்பை தேடும் பொழுது, அவர் நம்முடைய பாவங்களை கழுவி மன்னிக்கிறார். அவரில் ஒரு புதிய படைப்பாக மாறுகிறோம். அப்பொழுது தேவனால் நம்முடைய கடந்த கால பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு மறக்கப்படுகிறது.

**நான் எப்போதும் மற்றவர்கள் மேல் அக்கறை கொண்டு அவர்களுக்கு உதவுவேன். எனக்குள் எந்த பாவங்களும் இல்லை. நான் ஏன் பாவத்தை பற்றி பேச வேண்டும்?**

நாம் மற்றவர்களுக்கு நல்லது செய்வதாலோ, உதவி செய்வதாலோ நமக்கு பாவங்கள் இல்லை என்று அர்த்தம் இல்லை. பாவம் என்பது ,திருட்டு, கொலை, கொள்ளை இது போன்ற குற்றங்கள் பற்றியது அல்ல. நாம் முரட்டுத்தனமாவும், பொய்கள் சொல்லுவதும், பெருமை, பொறாமை, ஆணவம், காமம், மற்றும் கோபமான நிலைகளில் இருப்பதும் பாவமே.

சில நேரங்களில் நம்முடைய சொந்த குறைபாடுகளை, தோல்விகளை ஏற்க கடினமாக உள்ளது. அதை பற்றி அறிக்கையிட்டு பேசவதும் கடினமாக இருக்கிறது.

கடவுள் நாம் பாவங்களில் இருந்து விடுதலை பெற விரும்புகிறார். தேவன் விரும்புவது போல நாம் நம் தவறுகளையும் பாவங்களை உணர்ந்து, வருந்தி அவரிடத்தில் ஒப்புகொடுத்தால் அவரால் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நம்மை கழுவி சுத்திகரிப்பதற்கு முடியும்.

**<u>பாவங்களை அறிக்கையிடுவது என்றால் என்ன?</u>**

**<u>ஏன் நான் பாவங்களை ஒப்புக்கொள்ள வேண்டும்?</u>**

பாவங்களை அறிக்கையிடுவது என்பது, நம் வாழ்வில் நாம் பாவங்களை செய்து இருக்கிறோம் என்று உணர்ந்து, தவறுகளை செய்துவிட்டோம் என்று கடவுளிடம் ஒப்பு கொடுத்தல். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டு மனந்திரும்பி அவரை மன்னிக்கும்படி கேட்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தை நமக்கு அளிக்கும் வாக்குறுதிகள் – “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."

**மனந்திரும்புதல் என்றால் என்ன? ஒருவர் எப்படி மனந்திரும்ப வேண்டும்?**

நாம் நம் பாவங்களை அறிக்கையிட்டு, மேலும் நாம் செய்த பாவங்கள், மற்றும் தவறான காரியங்களுக்காக மனம் வருந்த வேண்டுமென்பதை தேவனாகிய கடவுள் நாடுகிறார்.

நமது பழைய தவறான நடவடிக்கைகளை புறக்கணித்து அவரை பின்பற்ற அவர் விரும்புகிறார். நம் பாவங்களை அறிக்கையிடுவது மற்றும் இல்லாமல், நாம் செய்த தவறுகளுக்காக வருந்த வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

மனந்திரும்புதல் என்பது, நாம் செய்த பாவங்களுக்காகவும், தவறுகளுக்காகவும் வருத்தப்படுவது. மனந்திரும்புதல், நாம் திரும்பவும் அந்த பாவங்களை செய்யகூடாது என்ற ஆர்வத்தை ஏற்ப்படுத்துகிறது.

நாம் மன்னிப்பு கேட்டு தேவனை நோக்கி பிராத்திக்கும் போது, ,மேலும் நல்லவராக ஆக அவரது வலிமையை (பெலம்) தந்தருள அவரிடம் பிராத்திக்க வேண்டும்.

மனந்திரும்புதல் என்றால் குற்றமற்றவராகிவிடுவோம் என்று அர்த்தம் இல்லை. நம் அன்புத் தகப்பனாகிய கடவுள், சில நேரங்களில் நாம் பின்னடையலாம் என்று புரிந்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் நாம் வருந்தி, மன்னிப்பு கேட்கும் பொழுது, அவரிடம் மன்னிப்பை பெறுகிறோம். இவ்வாறு, மெல்ல மெல்ல தேவன் நம்மை வடிவமைக்கிறார். ஆக தேவனோடு நம் உறவு ஆழமாகிறது.

நாம் மனந்திரும்பி தேவனை தேடும் போது இயேசு தாமே நமக்கு உதவுவார் என்று வேதாகமம் .( பைபிள்) கூறுகிறது.

***"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.***

***நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்."***

நாம் கடவுளை நெருக்கமாக பின்பற்ற அவரது இயல்பில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொரு முறையும் பாவம் செய்யும் பொழுது, நாம் தேவனிடத்தில் மன்னிப்பு கேட்கும் போது அவர் நம்மை மன்னிக்கிறார். இதேபோல், நாமும் மற்றவர்களை மன்னிக்க வேண்டும்

மேலும் வேதாகமத்தில் ( பைபிள்) கூறப்பட்டிறுக்கிறது என்னவென்றால்

***"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.கடவுள் இருக்கிறார் ஆர்மர் என்பதன் பொருள் என்ன?"***

**தேவனுடைய கவசம் (சர்வாயுதம்) என்றால் ஏன்ன?**

நாம் அனுதினமும் நமக்கு எதிரான தீயசக்திகளை எதிர்த்து போராட நாம் சார்ந்துள்ள ஆவிக்குரிய கவசமே (சர்வாயுதம்) தேவனுடைய கவசம் எனெப்படுகிறது. தேவனுடைய கவசமென்பது(சர்வாயுதம்) **இரட்சிப்பாகிய** தலைகவசம், **சத்தியம்** என்னும் இடைக்கச்சை, **நீதியென்னும்** மார்க்கவசம், **சமாதானத்தின்** சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையையும் **விசுவாசமென்னும்** கேடகத்தையும், **வேதவசனமாகிய** ஆவியின் பட்டயத்தையும் குறிக்கிறது.

தினமும் நம்முடைய ஜெபத்தில் தேவனுடைய கவசத்தை அணிந்து ஆண்டவருடைய பாதுகாப்பில் எப்படி வாழ்வது என்பதை தெறிந்துக் கொள்ள இந்த புத்தகத்தின் மூன்றாம்(3) பகுதியை (ஜெபங்களின் பிரிவு) பார்க்கவும்.

நீங்கள் தினசரி காலை ஜெபத்தில் இந்த பிராத்தனையை வழக்கமாக ஒரு பகுதியாக்கி, தேவனுடைய கவசத்தை அணிந்து கொள்ளுங்கள். இந்த ஜெபம் அனுதினமும் தேவனுடைய சக்தியிலும், வல்லமையிலும், மற்றும் ஆவிகுறிய சவால்களை எதிர்க்க நம்மை ஆயத்தப் படுத்துகிறது.

அவ்வாறு ஆவிக்குறிய கவசத்தை அனிந்துக்கொள்ளும் போது ஆன்மீக தாக்குதல்களை எதிர்த்து நிற்கவும், நம் மனதிலும் இதயத்திலும் ஏற்படும் தீய எண்ணங்கள் மற்றும் உணர்வுகளிலிருந்து பாதுகாக்கிறது.

## கிறிஸ்துவுக்குள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்கு என்ன அர்த்தம்?

## கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் என்றால் என்ன?

ஒருவர் முதல் கேள்வியாக, எதிலிருந்து விடுதலையாக வேண்டும் என்று கேட்கலாம். ஒரு நொடி, உங்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்பை பின்நோக்கி பாருங்கள். பயம், பொறாமை, கசப்பு, கோபம், மன்னிக்க மறுப்பது, பழைய காயங்கள், போதை, காமம், தாழ்வு மனப்பான்மை போன்றவைகள் உங்கள் வாழ்வில் இருப்பதை உணர்கிறீர்களா? இது போன்றவைகள் இல்லை என்று நாம் மறுப்பதும் இயற்கையே. எனினும், உண்மையிலேயே நம் இதயங்களை ஆராய்யும் போது, நம் வாழ்வில் பல பகுதிகளை சீர்படுத்தி மேம்படுத்த வேண்டும் என்று தெரிந்து கொள்ள முடியும்.

ஆனால் நாம் நம் சொந்த பலத்தில் மாற்ற முயற்சிக்கும் போது மீண்டும் மீண்டும் தோல்வியடைகிறோம். இயேசு ஒருவரே நம்மை விடுவிக்க முடியும்.

இயேசு கூறுகிறார்: ***"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.",***

இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டு, நாம் செய்த பாவங்களுக்காக வருந்தி அறிக்கையிட்டு, அவரது மன்னிப்பும் மற்றும் மேன்மையுள்ள அவரது வலிமையை நமக்கு தரும்படி கேட்க வேண்டும். இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் நம்மை பாவத்திலிருந்து விடுபட்டு வாழ வழிவகுக்கிறது என்று விசுவாசித்து, தேவனுடைய பிரசனத்திலும், வேதாகமத்தை வாசிப்பதலும், ஜெபத்திலும் நேரம் செலவழித்தால், பாவத்தைவிட்டு விலகி தேவனை நோக்கி வழி நடக்க முடியும்.